வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.0973/அ4/2025, நாள். 25.02.2025

-----

பொருள்: மாதிரி பள்ளிகள் (Model Schools) வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு/நகராட்சி/உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் 9-ஆம் வகுப்பில் பயிலும் மாணவர்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை மாவட்ட மாதிரிப் பள்ளிகளில் 10ஆம் வகுப்பில் சேர்க்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுதல் சார்பாக

பார்வை:
1. G.O.(Ms.) No.210, School Education (SSA1) Department, dated.18.11.2023
2. சென்னை.6, தமிழ்நாடு மாதிரிப்பள்ளிகள் செயல்முறை ந.க.எண்.446/C1/MS/2025 நாள்.24.02.2025

-----

சென்னை, உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மாதிரி பள்ளிகள் அவர்களின் செயல்முறைப்படி பார்வை 2இல் காணும் வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு/ நகராட்சி உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளில் 9ஆம் வகுப்பில் பயிலும் மாணவர்கள் கல்வி, நுண்கலை மற்றும் விளையாட்டுகளில் சிறந்து விளங்குவதற்கான வாய்ப்பை வழங்குவதற்கு ஏதுவாக ஆண்டுதோறும் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் இந்த மாதிரிப் பள்ளிகளில் சேர்க்கப்படுகிறார்கள்.

உறுப்பினர் செயலர் அவர்களின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி எதிர்வரும் 2025-26 கல்வி ஆண்டிற்கான பத்தாம் வகுப்பு மாணவர் சேர்க்கைக்கு மாவட்ட மாதிரிப் பள்ளிகளில் ஏற்கனவே 9ஆம் வகுப்பில் பயின்று வரும் மாணவர்கள் போக எஞ்சியுள்ள இடங்களுக்கு இணைப்பில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களை மாதிரிப் பள்ளிகளில் 15.03.2025க்குள் 10ஆம் வகுப்பில் சேர மாணவர்களுக்கு அறிவுறுத்துமாறு சார்ந்த தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் 15.03.2025க்குள் சேர உரிய நடவடிக்கை மேற்கொள்ள தலைமையாசிரியருக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு :- மாணவர்களின் பெயர் பட்டியல்

//ஒப்பம்//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்,
தலைமை ஆசிரியர்,
அரசு/ நகராட்சி/ உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்